[2009 ஜூலை 21

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் கூறுவதுபோல, இந்தப் பரிவுத் தொகை வழங்குவதிலே தாமதம் ஏற்பட்டது உண்மையானால், அந்தத் தாமதத்திற்கு எந்த அதிகாரி காரணமாக இருக்கிறாரோ, அது பற்றி விசாரிக்கப்பட்டு, அவர் நடவடிக்கைக்கு உள்ளாவார் என்பதையும், பரிவுத் தொகை நிச்சயமாக வெகு விரைவிலே குறிப்பிடப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆள) மேட்டூர், மின்சார வாரியப் பணிமனை ஊழியர்கள் வேலையின்றிப் பாதிப்பு

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி.

திரு. ஜி.கே. மணி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டத்தில், மேட்டூர் மின் உற்பத்திக் கேந்திரமாக விளங்கிக் கொண்டிருக்கிறது. அங்கு 75 ஆண்டுக் காலம் சிறப்பாக இயங்கி வருகிற மின்சார வாரியப் பணிமனை, work shop இருக்கிறது. அதிலே இப்போது உற்பத்தியை நிறுத்தச் சொல்லிவிட்டார்கள். மின்சார வாரியத்தின் சார்பாக உற்பத்தியை நிறுத்தச்சொல்லிவிட்டு, அங்கே உற்பத்தி செய்யப்படுகிற உயர் மின் கோபுரங்கள், அதற்கான உதிரிப் பாகங்கள் தயாரிக்கும் பணிகளைத் தனியாருக்குக் கொடுத்துவிட்ட காரணத்தால், அங்கே நீண்ட காலமாக நிரந்தரப் பணியாளர்களாகப் பணியாற்றி வருகிற 350 பேரின் வாழ்க்கை கேள்விக்குறியாகி இருக்கிறது. தங்களுக்கு நிதி உதவி வேண்டும் என்று அவர்கள் கேட்ட நேரத்தில் "நாங்கள் நிதியைக் கொடுக்கிறோம், வரக்கூடிய பணி உத்தரவு அடிப்படையில் உதிரிப் பாகங்களையெல்லாம் தயாரித்து நீங்களே விற்பனை செய்துகொள்ளுங்கள். வரக்கூடிய இலாபத்தினைச் சம்பளமாக எடுத்துக்கொள்ளுங்கள்" என்று மின்சார வாரியத்தினர் சொல்லக்கூடிய நிலை உருவாகியிருக்கின்ற காரணத்தால் 350 நிரந்தரப் பணியாளர்களின் நிலை பாதிக்கப்பட்டிருக்கிறது. தனியார் துறை உள்ளே வர இது வழி வகுக்கின்ற காரணத்தாலே, மீண்டும் அங்கே மின் உற்பத்திக்குத் தேவையான மின் கோபுரங்களைத் தயாரிப்பதற்கும், அந்தத் தொழிலாளர்களைப் பாதுகாப்பதற்கும் மின்சார வாரியம் ஆவன செய்ய வேண்டும் என்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.